1979 மார்ச் 26]

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவரவர்களே, இதுகுறித்து ஏற்கனவே அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. உதாரணமாக, வியாபாரக் கடனாக 5,000 ரூபாயைக் கொடுக்கிறபொழுது முதல் தவணையாக, 3,000 ரூபாயையும், அதற்கடுத்த தவணையில் 2,000 ரூபாயையும் கொடுக்கப்படுகிறது. முதல் தவணைக் கடனைக் கொடுத்த பிறகு அவர்கள் எந்தக்காரியத்திற்காக அந்த உதவியைப் பெற்றார்களோ அந்த காரியங்களுக்கு அந்தப் பணத்தைச் சரியான வழியில் செலவழித்திருக்கிறார்களா என்று பார்த்தபிறகு, மத்திய அரசு மீண்டும் 2,000 ரூபாயை மாநில அரசு மூலம் கொடுக்கிறது. சிலயிடங்களில் தருகின்ற பணத்தைவேறு எதற்காவது செலவழித்துவிட்டு எங்களுக்கு வியாபாரம் செய்யத் தெரியவில்லை, மறுபடியும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுங்கள் என்று சொல்லும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு இப்படிப்பட்ட புகார்களுக்கு இடமில்லாமல், செவ்வையாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அகதிகளுக்குக் கொடுக்கின்ற கடனுதவியை இடைத்தரகர்கள் மோசடி செய்கின்ற காரணத்தால் அதற்காகத் தனிப் போலீஸ் அமைப்பு வேண்டுமென்று மத்திய அரசை இந்த அரசு கேட்டதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். தமிழ்நாட்டில் இருக்கின்ற போலீஸ் அமைப்பு இந்த வேலையைச் செய்யத் தகுதி இல்லையா! தனி போலீஸ் அமைப்பு கேட்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், காவல்துறையில் தனி போலீஸ் படையை அமைக்க வேண்டுமென்று தெரிவித்த பொழுது, மாநிலத்திலே ஒன்றிரண்டு பேர்களை அதிகமாகச் சேர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி, மண்டபத்தில், குறிப்பாக இராமேசுவரத்தில் வந்திறங்கும் பொழுது, அங்கே நடைபெறும் இடைத்தரகர்களின் மோசடியைத் தவிர்க்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசைக் கேட்டது. ஆனால் தற்சமயம் நான் இப்பொழுது வாசித்தப்படி, இடைத்தரகர்கள் மீது வழக்குகள் பதிவு செய்திருக்கிறோம், இங்கே இப்பொழுது அப்படி அதிகமான புகார்கள் வரவில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை, நொச்சிக்குப்பம் பகுதியில் கடலரிப்பு.

*வினா எண். 540—திரு. டி. கே. கபாலி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை, மயிலை தொகுதியில் நொச்சிக்குப்பத்தில் இருந்து முள்ளிக்குப்பம் வரையுள்ள சாலையினை கடல் அரிப்பிலிருந்து பாதுகாப்பதற்கான மதிற் சுவர் கட்டும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலாளர்): ஆம்.

திரு. இரா. அமிர்தராஜ்: பேரவைத் தலைவரவர்களே, இந்த மதிற் சுவர் எவ்வளவு தூரம் கட்டப்படும்? இதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது? திருச்செந்தூர் மணப்பாடு புன்னக்காயல் ஆகிய ஊர்களில் கடல் அரிப்பு தொடர்ந்து ஏற்படுவதால் அந்தப்பகுதியிலும் தடுப்பு சுவர் கட்ட அரசு முன்வருமா.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, தென் சென்னையில் பட்டினப் பாக்கத்திலிருந்து புதிய கலங்கரை விளக்கம் வரை, மாற்று சாலையில் 300 மற்றும் 200 மீட்டர்கள் நீளத்திற்கு தனித் தனியாக கடலரிக்கப்பட்ட இடங்களில், கடலரிப்பைத் தடுக்க தற்காலிக பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு. தலைமைப்பொறியாளர் (கட்டிடம்) ரூ. 10.30 இலட்சங் களுக்கான மதிப்பீட்டை அளித்துள்ளார். மேற்கூறிய செயற்குறிப்பு நிதித்துறையின் பரிசீலனையில் உள்ளது. திருச் செந்தூரில் புன்னக்காயல் ஊரில் கடல் அரிப்பைத் தடுக்க பாதுகாப்பு செய்யப்படுமா என்று கேட்கிறார் மாண்புமிகு உறுப்பினர். தேவையைப் பொறுத்து அரசு பரிசீலிக்கும்.

திரு. பொ. சிகாமணி: பேரவைத் தலைவரவர்களே, கடல் அரிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தடுப்பு சுவர் கட்டுவது பற்றி நிதி அமைச்சரின் பேரவைச் செயலர் குறிப்பிட்டார். ஆனால், சாலைகள் பெரும் அளவு பாதிக்கப்பட்டிருப்பதைச் சீர் செய்ய, அரசு என்ன நடவடிக்கைகள் எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, ரூ. 1.05 இலட்சத்திற்கு, தலைமை பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணி) இது தொடர்பாக சாலை, நடைபாதை ஆகியவற்றை இச்சாலைப் பகுதியில் செப்பனிட செயற்குறிப்பு ஒன்று அளித்துள்ளார்.

திருச்சி நகரத்தில் வெள்ளத்தால் சேதம்.

*வினா எண். 541—திரு கே. சௌந்திரராசன்: மாண்பு மிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.